Saturday, 04 November 2017

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

## 2017- ஒன்றுகூடல் அறிக்கை

## *Jaffna Muslim Association-UK*

## அஸ்ஸலாமு அலைக்கும்!

*சென்ற ஆக்ஸ்ட் மாதம், மகத்தான ஒன்று கூடல் ஒன்றை எமது தாய்நிலமான யாழ்ப்பாண மண்ணிலே நடாத்தி முடித்திருந்தோம். பலபேருடைய வாழ்நாள் கனவான அந்த நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடந்து முடிந்ததானது எமக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது.*

*எமது நினைவுக்கு எட்டிய வரையில், யாழ் முஸ்லிம் மக்களுடைய வரலாற்றில் இதற்கு முன்பு, இது போன்ற பன்முகப்படுத்தப்பட்ட மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வுகள் தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெற்றதில்லை. ஆகஸ்ட் 01 ஆம் திகதியிலிருந்து 7ஆம் திகதிவரை ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தோம். பல்லாயிரக்கணக்கில் ஆர்வமுடன் மக்கள் கலந்து கொண்டமை இந்த நிகழ்ச்சிகளுக்கு கிடைத்த முதல் வெற்றியாகக் கருதுகிறோம்.*

*இந்த ஒன்றுகூடலின் நோக்கங்களாக பல விடயங்கள் அமைந்திருந்தன.*

**அவை.........**

*1)பாழ்பட்டுப்போன எமது தாய்நிலத்தை புத்துருவாக்கம் செய்வதில் மீள்குடியேற்றங்கள் அவசியம் தேவைப்படுகின்றன. ஒன்றுகூடல்கள் மூலம் மக்களின் பார்வையைத்திருப்பி தமது தாய்நிலத்தை நோக்கி பயணிக்கச் செய்யலாம்.*

*2)ஒரு சில மணித்துளிகள் போதாது! சில நாட்களாவது தங்கியிருந்து பிறந்த மண்ணோடு பற்றுதலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*3)இன்று யாழ் முஸ்லிம்கள் சர்வதேசங்களிலும், நாட்டின் பல பாகங்களிலும் பரந்து வாழ்கிறார்கள். சில வருடங்களுக்கு ஒரு முறையாவது எம்மக்களை தாய்மண்ணில் ஒன்றுகூட்ட வேண்டும். இதன் மூலம் சமூக ஒற்றுமை வலுப்பெறும்.*

*4)1990 களுக்குப் பிறகு உதித்த புதிய தலைமுறையினருக்கு எமது மண்ணையும் மக்களையும் அறிமுகம் செய்து வைக்க வேண்டும். தொப்புள்கொடி அறுந்தாலும், உறவுகளை உணர்வுகள் மூலம் கட்டி வைத்து பாதுகாக்கலாம்.*

JMA-UK

*5)கருத்தரங்குகள், கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், கலந்துரையாடல்கள், விருந்துபசாரங்கள் மூலம் மக்களின் உணர்வும் சிந்தனைகளும் தூண்டப்பெற்று ஓர் ஆரோக்கியமான, சமூக வாஞ்சை கொண்ட சமூகப்பற்றாளர்களாக நாம் உருப்பெறலாம்.*

மேலும்,

*6)கடந்த பதினைந்து வருடங்களாக, தொலைத்தொடர்பு கருவிகள் மூலமும், தொண்டர்கள் மூலமும், களப்பணியாற்றிக் கொண்டிருந்த நாம், நிஜமான களத்தையும், களநாயகர்களையும்(சமுக ஆர்வலர்கள், தொண்டர்கள்), நிலத்தையும், நிலமாந்தர்களையும் நேரில் தரிசிக்க விரும்பினோம்.*

**ஒன்றுகூடல் நிகழ்வுகளை நான்கு பிரிவுகளாக வகுத்து அமைத்திருந்தோம்.**

**1)மாணவர் கலை நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு நாடகங்கள், பேச்சுக்கள், கருத்தரங்குகள்.**

**2)உதைப்பந்தாட்ட, துடுப்பாட்ட, மெய்வல்லுநர் போட்டிகள்,**

**3)பொதுமக்கள்,எமது சமூகம் சார்ந்த, தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள், மத அமைப்புக்கள், உலமாக்கள், கல்வி நிறுவனங்கள், கல்வியாலர்கள், அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், போன்றோருடனான சந்திப்புக்கள்.**

**4)நலத்திட்டங்களை வழங்குதல்.**

*ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூது மண்டபத்தில், வண்ணமயமாக, ஆறுநாட்கள் தொடர்ந்து நடந்த மாணவர் நிகழ்ச்சிகள் அனைவரது எண்ணங்களையும் கொள்ளை கொள்ளும் விதத்தில் அமைந்திருந்தன. தமிழ், ஆங்கிலம், சிங்களம் என மும்மொழிகளிலும், நமது குழந்தைச் செல்வங்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தும் முகமாக நிகழ்ச்சிகளை வாரிவழங்கினார்கள்.*

*போதிய வசதிகளற்ற நிலையிலும், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும், யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறி வாழத்தலைப்பட்டுள்ள எமது மக்கள், தமது குழந்தைகளின் கல்வி வளர்ச்சி, அதன் மூலம் மனவளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தோம்.*

JMA-UK

*மேடைக் கூச்சமின்றி, மிகுந்த தன்னம்பிக்கையோடு, சிறுவர் சிறுமியர் பேசி முழங்கி, ஆடிப்பாடி, நடித்து வழங்கிய நிகழ்சிகள் எம்மை மெய்சிலிர்க்க வைத்தன. இத்தனை திறமையாக தமது பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதில் அவர்களது பெற்றோர்கள் காட்டிய அக்கறையை பாராட்டியே தீர வேண்டும். இலங்கைக்கு வெளியே பிறந்து வளர்ந்த எமது பிள்ளைகளும், உள்ளூர்க் குழந்தைகளோடு இரண்டறக் கலந்து நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டமை, இந்த நிகழ்ச்சிகளின் நோக்கங்களின் சிறப்பம்சமாகப் பார்க்கப்பட்டது. எங்கு பிறந்தாலும் எப்படி வாழ்ந்தாலும், நாம் ஒருதாய் மக்கள் என்கிற உணர்வை, நமது எதிர்கால சந்ததியினர் மத்தியில் ஏற்படுத்துவதற்கு, இது போன்ற நிகழ்ச்சிகள் முதல் படிக்கட்டுகளாக அமையும்.*

*தாயுள்ளம் கொண்ட சகோதரர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சுமார் ஒரு இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான சொக்கிலேட்டு, இனிப்புப் பொருட்களையும், குளிர்பானங்களையும், ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாய்கள் மதிப்புள்ள எழுநூறு பரிசுப் பொதிகளையும், பங்குபற்றிய பிள்ளைகள், பங்குபற்ற முடியாது போன பிள்ளைகள், என்ற பாகுபாடின்றி அனைத்துப் பிள்ளைகளுக்கும் வழங்கி, எல்லோரையும் மகிழ்வித்தோம், நாமும் மகிழ்ந்தோம்.*

*இத்தருணத்தில், மாணவர் நிகழ்ச்சிகளை வடிவமைத்து, அரும்பாடுபட்டு சிறப்பாக நடத்தி முடித்துத்தந்த உயர்கல்வி மாணவ மாணவிகள், கல்வி நிறுவனத்தினர், மதரஸா நிர்வாகிகள், அனைவரையும் வாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*வார நாட்களில், கல்வியாளர்களினால், வடிவமைத்து, தொகுத்து வழங்கப்பட்ட, ஒஸ்மானியாக் கல்லூரி அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்ககு, மாணவர்களின் மனவளர்ச்சி பற்றிய பெற்றோருக்கான கருத்தரங்கு, இறுதிநாள் இடம்பெற்ற பட்டிமன்றம், கவிதை, விழிப்புணர்வு நாடகம், ஹிப்லு மதரஸா மாணவர்கள் அரங்கேற்றிய மேடை நிகழ்ச்சிகள், அனைத்தும் அனைவரினதும் கருத்துக்களையும் கவர்ந்து பாராட்டுக்களைப் பெற்றன.*

*எமது பிள்ளைச் செல்வங்களால், மஹ்மூது மண்டபம் உயிர்பெற்றது என்றால், அந்த மண்டபத்திற்கு கிரீடம் போல் திகழ்ந்தது அங்கே அழகாக அமைக்கப்பெற்றிருந்த அகன்ற மேடை. கல்லூரியின் எதிர்காலப் பாவனைக்காக சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய்கள் செலவில் மேடைக்கு நிரந்தர திரைச்சீலைகள் அமைத்து, கல்லூரி நிர்வாகத்திடம் ஒப்படைத்தோம்.*

*யாழ் சோனகதெருவின் இருதயம் போல் திகழ்வது ஒஸ்மானியாக் கல்லூரியாகும். அந்த இருதயத்தின் துடிப்பைப் பொறுத்தே யழ் முஸ்லிம்களின் ஆரோக்கியம் அமையும். ஒஸ்மானியாக் கல்லுரியின் கற்ப்பித்தல் தரத்தை மேலும் வளப்படுத்தும் முகமாக கல்லூரி நூலகத்திற்கு சுமார் 1620 புத்தகங்களை முதற்கட்டமாக வழங்கினோம். புத்தகங்களை கையளிக்கும் நிகழ்ச்சியில், கல்லூரி அதிபர் எம்மிடமிருந்து புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார். ஒஸ்மானியாக் கல்லூரி நூலகம், சர்வதேசத்தரத்தில் அமைய தொடந்து எமது பங்களிப்பைச் செய்ய எண்ணியுள்ளோம்.*

*மேலதிகமாக, புல்வெட்டும் இயந்திரங்கள் இரண்டை கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தோம்.*

*மேடை நிகழ்ச்சிகள் அனைத்தையும், பொதுமக்கள் பார்த்து மகிழும் வண்ணம் Jaffna Muslim Association-UK / Facebook , Youtube , www.jaffnamuslimuk.org ஆகிய தளங்களில் பதிவேற்றியுள்ளோம் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.*

*மேடை நிகழ்ச்சிகள், மனமகிழ்வைத் தந்தன என்றால், ஒன்றுகூடலின் இன்னொறு அம்சமான விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள், புத்துணர்ச்சியையும், புதுத்தெம்பையும் தந்தன. ஜின்னா மைதானத்தில், செவ்வாய்க் கிழமை தொடக்கம் ஆறுநாட்கள் தொடர்ந்து நடந்த மாலைநேர உதைப்பந்தாட்டப் போட்டிகள், எமது சமூகத்திற்கே உரித்தான சிறப்பு வெளிப்பாடுகள்!*

*வார இறுதியில் நடைபெற்ற, கிரிக்கட் போட்டிகளும், மெய்வல்லுநர் போட்டிகளும், ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற, பரிசளிப்பு, பட்டமளிப்பு, நிகழ்வுகளும், வாணவேடிக்கைகளும், தெருவோர வண்ண மின்விளக்கு அலங்காரங்களும், கலந்து கொண்ட சகலருக்கும் திருவிழா மனநிலையை ஏற்படுத்தி, உற்சாக வெள்ளத்தில் மூழ்கச் செய்திருந்தன.*

*இவ்வளவு அற்புதமாக விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒருங்கமைத்து, நடத்தி முடித்ததில், Jaffna Muslim Sports Club மற்றும் Jaffna Muslim United ஆகிய இரு கழகத்தினரும் முன்நின்று அர்ப்பணிப்புடன் உழைத்திருந்தனர்.*

*இந்த இரு கழக வீரர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், எமது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.*

*இறுதி நாட்களில், விளையாட்டுப் போட்டிகளால் ஜின்னா மைதானமும், முஸ்லிம் கல்லூரி வீதியும் களைகட்டியதென்றால், ஒஸ்மானியாக் கல்லூரி வளாகம் இரு வேறு நிகழ்ச்சிகளால் நிரம்பி வழிந்தது.*

*பெண்களின் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக, யாழ்/முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி மையத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்த சிறுகடைத் தொகுதிகளுக்கு மக்கள் ஆர்வத்தோடு விஜயம் செய்தனர். பாரம்பரிய உணவுகள் உட்பட பலவகையான பொருட்கள் விற்பனைக்கு இருந்தன. எமது சமூகப் பெண்களின் சுய முன்னேற்றத்தில் மாதர் சங்கத்தினரின் எடுத்துக் கொள்ளும் அக்கறை பாராட்டப்பட வேண்டியது.*

*செய்யும் தொண்டுகளில் நெஞ்சுக்கு மிகவும் நெருங்கியிருப்பது மருத்துவ சேவை. ஹிரா அறக்கட்டளையினரின் பங்களிப்போடு நடைபெற்ற மருத்துவ முகாமில் பல நூற்றுக்கணக்கில் மக்கள் பங்குபற்றி பயனடைந்தனர். இதில் சிறப்பம்சமாக மதவேறுபாடின்றி மாற்று மதத்தினருக்கும் இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. ஹிரா அமைப்பினரின் தூய நற்பணிகள் தொடர வாழ்த்துகிறோம்.*

*ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளின் இறுதிநாளான 7ஆம் திகதி திங்கட்கிழமை மண்கும்பனில் நடந்த விருந்துபசாரம், எமது நிகழ்ச்சிகளுக்கு முத்தாய்ப்பாய் அமைந்திருந்தது. ஒரு பக்கம் நீலக்கடல் நிரம்பிவழிய, மறுபக்கம் வெள்ளக்கடற்கரை, மக்கள் வெள்ளத்தால் பொங்கிவழிந்தது. ஆழ்கடலின் அழகிய தோற்றம்! வெள்ளை மணல்! தென்னைமர நிழல்! சாமரம் வீசும் பனைமரச் சோலைகளின் அற்புதமான தாலாட்டு! இந்த அழகையெல்லாம் பருகிக் கொண்டு உற்றார் உறவினர்களோடு அமர்ந்து, கதைகள் பல பேசி, பிலாச்சோறு உண்ணுவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு அந்த வாய்ப்புக் கிட்டியது. 1990 களுக்கு முன்பு கூட, இது போன்ற மக்கள் வருகையை, இந்த மண் கண்டதில்லை, என கூறுமளவிற்கு நிலமை இருந்தது.*

*வெள்ளைக் கடற்கரை விருந்துபசார நிகழ்வை தனது வீட்டு நிகழ்வு போல வெகு சிறப்பாக நடத்தித்தந்த கொடை உள்ளம் கொண்ட அந்த நல்ல மனிதருக்கு இறைவன் மென்மேலும் பரகத்துச் செய்ய வேண்டும்.*

*வெள்ளைக் கடற்கரையை வெருமனே அனுபவித்துவிட்டு வந்துவிடும் சுயநலவாதிகளாக நாம் இல்லை. சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் எனபதில் JMA-UK அதிக அக்கறையோடு செயற்பட்டு வருகிறது. அந்த வகையில், கமநல சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் கிடைக்கப் பெற்ற 70 க்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகளை, வெள்ளைக்கடற்கரையில் நட்டோம். அதன் பராமரிப்பு பணிகளுக்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். எமது எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வளமான தாய்நிலத்தை விட்டுச் செல்லவே நாம் விரும்புகிறோம்.*

JMA-UK

*நாம் இலங்கையில் தங்கி நிற்கும் நாட்களில் பலவகையான சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்த எண்ணியிருந்தோம். அவற்றுள் மிக முக்கிய நிலையான தர்மமான(ஸதக்கத்துல் ஜாரியா) நீர்க்கிணறுகளை அமைத்துக் கொடுத்தல் என்கிற நல்ல திட்டத்திற்கு இசைவாக பல கொடையாளிகளாலும் வழங்கப் பட்ட நிதியை கொண்டு, நாட்டின் பல பகுதிகளிலும் கிணறுகளைக் அமைத்துக் கொடுத்தோம்.*

*தமது பகுதிகளுக்கும் கிணறுகளை அமைத்துத் தரும்படியும், நீர்நிலைகளை புனரமைத்து தூர்வாரித் தரும்படியும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. அவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க மக்களின் உதவிகளை நாடி நிற்கிறோம்.*

*அந்தக் காலகட்டத்தில் நாம் செயல்படுத்திய நலத்திட்டங்கள்......*

**1)புத்தளம் வைத்தியசாலை- சற்கர நாற்காலிகள் – 4**

**2)நுரைச்சோலை/புத்தளம்- மாற்றுத்திறனாளி ஒருவருக்கு தொழில் செய்வதற்கான கனனித் தொகுதி.**

**3)புத்தளம் மற்றும் பாணந்துறை- வறிய நிலையிலுள்ள இரு குடும்பங்களிற்கு வீட்டுத்திருத்த வேலைகளுக்காக 150,000 Rs பெறுமதியான உதவிகள்.**

**4)சதாமியாபுரம்/புத்தளம்- கிரிகட் மற்றும் வொலிபோல் விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு.**

**5)முல்லிப்பொத்தானை/கிண்ணியா-**

**பொதுக்கிணறு- 1**

**6)ஹிஜ்ராபுரம்/முல்லியவல/முல்லைத்தீவு**

**பொதுக்கிணறு-2**

**பாடசாலைக்கு-1**

**தனியாருக்கு-1**

**7)காமால் லேன்/யாழ்ப்பாணம்**

**பொதுக்கிணறு/மோட்டாருடன் கூடிய நீர்த்தாங்கி-1**

**பொதுக்கிணறு-1**

**தனியாருக்கு-1**

**8)கதீஜா கல்லூரி/யாழ்ப்பாணம்- கனனித் தொகுதி-1**

JMA-UK

**9)மாதர் சங்கம்/யாழ்ப்பாணம்-கைத்தொழில் நிலையம் ஆரம்பிப்பதற்கான உதவித்தொகை.**

**10)மாதர் சங்கம் மற்றும் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய பெண்கள்/யாழ்ப்பாணம்- அபாயாக்கள் வழங்கப்பட்டன.**

**11)மருத்துவபீட மாணவர்/யாழ்ப்பாணம்-உதவித்தொகை வழங்கப்பட்டது.**

**12)ஒஸ்மானியாக் கல்லூரி/யாழ்ப்பாணம்-தொண்டர் ஆசிரியர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.**

**13)நூலகம்/யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி-**
**920-புதிய புத்தகங்கள். 700-பாவித்த புத்தகங்கள்.**

**14)கிண்ணியா,முல்லைத்தீவு,நாச்சுக்குடா,யாழ்ப்பாணம்**
**258-திருக்குரான் தொகுதிகள்**

**15)உதைப்பந்தாட்டக் கழகங்கள்/யாழ்ப்பாணம்-**
**உதைப்பந்தாட்டக் காலணிகள், பந்துகள்.**

**16)நீர்கொழும்பைச் சேர்ந்த மிகவும் வறிய நிலையிலுள்ள ஒரு குடும்பத்தினருக்கு வாழ்வாதார உதவித்தொகையாக 70 000Rs வழங்கினோம்.**

**17)ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூது மண்டபத்திற்கு 150 000Rs க்கு புதிய திரைச்சீலைகள்.**

*இன்னும், நூற்றுக்கும் மேற்பட்ட தனிமனித உதவி கோரல் விண்ணப்பங்களையும், அமைப்புசார் கோரிக்கைகளையும் கிடைக்கப் பெற்றுள்ளோம். எல்லாக் கோரிக்கைகளையும் கரிசனையோடும் கவனத்தோடும் பரிசீலித்து வருகிறோம். நம் உதவிகளை எதிர்பார்த்து நிற்கும் எம் சகோதரர்களுக்கு, உதவிக்கரம் நீட்ட விரும்பும் மக்கள், எம்மை தொடர்பு கொள்ளுமாறு, அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.*

*யாழ் முஸ்லிம் மக்களால், யாழ் முஸ்லிம் மக்களுக்காக உருவாக்கப்பட்ட JMA-UK தனது மக்களுடனேயே பயனிக்க விரும்புகிறது. செயற்திட்டங்களை வகுத்துக் கொள்ளுவதிலும், அதை அமுல்படுத்துவதிலும், மக்களின் அபிப்பிராயங்களுக்கும், உணர்வுகளுக்கும், மதிப்பளித்து, அவற்றை உள்வாங்கிக் கொண்டு செயற்படுவதினால், நாம் ஒரு முழுமையான மக்கள் இயக்கமாக வலம் வருகிறோம்.*

தொடர்ந்து தாயகத்தில் ஏழு நாட்கள் தங்கியிருந்து நிகழ்ச்சிகளை நடத்தியமையானது, எமது மக்களோடு இரண்டறக் கலந்து உறவாடவும், மக்களோடு மக்களாக வாழ்ந்து கொண்டு, தன்னலம் பாராது தொண்டாற்றும், எமது சமூகம் சார்ந்த பல்வேறு அமைப்புப் பிரதிநிதிகளையும், சமூக ஆர்வலர்களையும் சந்தித்து, சமூக விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவும், அரியதொரு வாய்ப்பாக அமைந்தது.

பொதுமக்கள் ஆர்வத்தோடு எம்மை அணுகி தமது எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்தினார்கள். தமது தேவைகளை வேண்டுகோள்களாக முன்வைத்தார்கள். பலரும் பாசத்தோடு எம்மை தமது இல்லங்களுக்கு அழைத்து, விருந்தளித்து, மகிழ்வித்தார்கள்.

எங்கு சென்றாலும், எவ்வளவு காலங்களானாலும், விருந்தோம்பலில் யாழ் முஸ்லிம்கள் சிறந்து விளங்குபவர்கள் என்பது மீண்டும் மீண்டும் உண்மைப் படுத்தப்படுவது கண்டு மகிழ்ந்தோம்.

எமது பயனத்திலே பல்வேறுபட்ட அமைப்புக்களையும் சந்தித்தோம். சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட முன்னணி சமூக ஆர்வலர்களோடு முறையான, காத்திரமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டோம். அவர்கள் ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தின் எழுச்சிக் குரல்களாக ஒலித்தார்கள். பல்வேறு கோணங்களில் அமைந்த அவர்களின் சமூகப்பார்வையும், பேச்சாற்றலும் எம்மை வியக்க வைத்தன. சிலர் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் பேசினார்கள், சிலர் அமைதியாகவும் ஆணித்தரமாகவும் கருத்துக்களை முன்வைத்தார்கள். எல்லோருடைய கண்களிலும், எமது சமூகத்தின் வளமான எதிர்காலம் பற்றிய கனவுகளும், எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கைகளும் பிரகாசித்துக் கொண்டிருந்ததைக் கண்டோம். அவர்களுடனான அமர்வுகள், எமக்கு ஒரு புத்துணர்ச்சியையும், நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கள யதார்த்தம் பற்றிய புரிதல்களையும், நாம் வகுக்க வேண்டிய பாதை பற்றிய புதுத்தெளிவையும் தந்தன. இனி வரும் காலங்களில், இந்த அமைப்பினர் சகலரோடும் ஒரு நெருக்கமான உறவைப் பேணிக் கொள்ளவும், பொருத்தமான இடங்களில், இயலுமான வரை, சேர்ந்து செயற்படவும் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

நாம் சந்தித்த அமைப்புக்கள்.......

ஒஸ்மானியாக் கல்லூரி நிர்வாகம், ஹதீஜா கல்லூரி நிர்வாகம், ஜம்மியதுல் உலமா பிரதிநிதிகள், பள்ளிவாசல் நிர்வாகத்தினர்கள், கிண்ணியா மதரஸா பிரதிநிதிகள், முல்லைத்தீவு மதரஸா பிரதிநிதிகள், ஹிரா அறக்கட்டளை, மக்கள் பணிமனை, யாழ்/ஜனாஸா நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம், புத்/சதாமியாபுரம் நலன்புரி சங்கம்,

*JMSC, JMU, OBA, SDS, SEDO, METRO, J/YMMA யாழ் பெண்கள் அபிவிருத்தி மையம், மாகாணசபைப் பிரதிநிதிகள், முஸ்லிம் காங்கிரஸ், மத நல்லிணக்கத்திற்கான அமைப்பு, புத்தளம் பொது வைத்தியசாலை, கோப்பாய் சிறுவர் பாடசாலை, யாழ்/கொட்டடி நமச்சிவாயம் பாடசாலை, இன்னும், கல்வியாலர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், கொடையாளிகள், சமூக ஆர்வலர்கள்.*

*இஸ்லாத்தில், தொழுகைக்கு அடுத்தபடியாக அதிகம் வலியுறுத்தப்படும் விடயமான தானதர்மங்கள் செய்வதில், இறையச்சத்தோடு செயற்படும், எம்சமூகத்தைச் சேர்ந்த கொடையாளிகள் பலர், இந்த ஒன்றுகூடலை நடத்தி முடிக்க எமக்கு உறுதுணையாக நின்றார்கள். "ஊரார் பிள்ளைய ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்று சொல்வார்கள். அதுபோல, மக்கள் நலங்களில் அக்கறையோடு செயற்படும் அவர்களது குடும்பங்களுக்கு இறைவன் நன்மை செய்வான்.*

*இறுதியாக, இந்த மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வுகள் தொடர்பான எமது கனவை நனவாக்கிய தொண்டர்கள்.!*
*எம் தோளோடுதோள் நின்ற அந்த தன்னலமற்ற நல்ல உள்ளங்களை எங்கள் நெஞ்சில் நிறுத்திக் கொள்கிறோம். ஒரு மரத்தை தாங்கி நிற்கும் வேர்களைப் போல, எமது அமைப்பை தாங்கி நிற்கும் தொண்டர்கள் இல்லாமல் JMA-UK இல்லை. எமது எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுப்பது தொண்டர்கள்தான்.*

*தமது பாசத்திற்குரிய குடும்பங்களைப் பிரிந்து, பல மைல்கள் தூரம் பயணம் செய்து, பல அசௌகரியங்களுக்கு மத்தியில், முகம் சுளிக்காமல், எரிச்சல் படாமல், எமது அன்புக் கட்டளைகளை சிரமேற் கொண்டு களமாடும் அந்தப் போராளிச் சகோதரர்கள், என்றென்றும் JMA-UK இன் சொந்தங்கள், சொத்துக்கள்.*

*"இது போன்ற நிகழ்ச்சிகளை, மீண்டும் எப்போது யாழ்ப்பாணத்தில் நடத்துவீர்கள்?" என பல தரப்பைச் சேர்ந்த மக்களும் ஆர்வத்துடன் கேட்கிறார்கள். நாமும் அது பற்றி சிந்திக்கிறோம். அநேகமாக இன்னும் மூன்று வருடங்களில் 2020 இல் அதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. காலம் கனிந்து வரும்போது, நாம் மீண்டும் புறப்படுவோம்! இன்ஸா அல்லாஹ்!*

*JAFFNA MUSLIM ASSOCIATION-UK*

JMA-UK